418
27.9.21

# சென்னை–6, முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: முனைவர். அதுல் ஆனந்த், இ.ஆ.ப.,

## சுருக்கம்

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திருமதி உ. புவனேஸ்வரி, இளநிலை உதவியாளர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகம், திருவாரூர் – 06.06.2016 முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை – ஆணை – வெளியிடல்.

---

ஜி3/24333/2019 நாள்.13.09.2021.

படிக்கப்பட்டது

1. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ஜி3/6168/2014, நாள். 23.05.2016.
2. சென்னை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரின் செயல்முறை ஆணைகள் எண்.ஓ1/35558/2013, நாள். 27.05.2016.
3. இதே எண்ணிட்ட இவ்வலுவலக முன்மொழிவு கடித நாள். 17.07.2019, 09.06.2020 14.12.2020 மற்றும் 18.03.2021.
4. அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ2) துறை, நாள். 26.02.2021.
5. அரசுக் கடித எண். 13971/எம்.1/2019–8, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள். 22.07.2021.

******

**ஆணை :**

மேலே 1ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணைகள் மூலம், திரு. த.கி. சுவாமிநாதன் என்பவர் திருவாரூர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகத்தில் தேர்வுநிலை உதவியாளராக பணிபுரிந்த போது 31.10.2013 அன்று பிற்பகல் மருத்துவ இயலாமை காரணமாக ஓய்வு பெற்றமையால், அவரது வாரிசுதாரரும் மனைவியுமாகிய திருமதி உ. புவனேஸ்வரி என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு 06.06.2016 அன்று முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

இந்நிலையில், மேலே 4ல் படிக்கப்பட்ட அரசாணையில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை பணிவரன்முறை செய்திட வரையறுக்கப்பட்ட வழிமுறைகளின்படியும், மேலே 5ல் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறும் திருமதி உ. புவனேஸ்வரி, இளநிலை உதவியாளரின் பணிவரன்முறை செய்வது தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:-

Scanned with CamScanner

<table>
<tr><td>மருத்துவ இயலாமை காரணமாக ஓய்வு பெற்ற பணியாளரின் பெயர், பதவி மற்றும் பணிபுரிந்த அலுவலகம்</td><td colspan="3">திரு. த.கி. சுவாமிநாதன்,<br>தேர்வுநிலை உதவியாளர்,<br>தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகம், திருவாரூர்.</td></tr>
<tr><td>மருத்துவ இயலாமை காரணமாக ஓய்வு பெற்ற பணியாளரின் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">21.08.1989 மு.ப</td></tr>
<tr><td>மருத்துவ இயலாமை காரணமாக ஓய்வு பெற்ற நாள்</td><td colspan="3">31.10.2013 பி.ப</td></tr>
<tr><td>கருணை அடிப்படையில் பணி கோரும் விண்ணப்பத்தாரரின் பெயர் மற்றும் விண்ணப்பம் பெறப்பட்ட நாள்</td><td colspan="3">திருமதி உ. புவனேஸ்வரி,<br>07.11.2013</td></tr>
<tr><td>விண்ணப்பம் மூன்றாண்டு காலத்திற்குள் பெறப்பட்டுள்ளதா</td><td colspan="3">ஆம்</td></tr>
<tr><td>விண்ணப்ப நாளில் கல்வி / வயது தகுதி பெற்றுள்ளாரா</td><td colspan="3">ஆம்<br>வயது – 44 வருடங்கள்<br>கல்வி – 10–ம் வகுப்பு தேர்ச்சி</td></tr>
<tr><td>மாற்று விண்ணப்பதாரரா / ஆம் எனில் விண்ணப்ப பெறப்பட்ட நாள்</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>பணியில் சேர்ந்த நாள்</td><td colspan="3">06.06.2016 முற்பகல்</td></tr>
<tr><td rowspan="2">விதித் தளர்வு / விலக்கு கோரும் இனங்கள்</td><td>வயது</td><td>கல்வி</td><td>விலக்கு கோரும் அரசாணை விபரம்</td></tr>
<tr><td>இல்லை</td><td>இல்லை</td><td>இல்லை</td></tr>
</table>

மேற்படி தனியர் கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளர் பணி நியமனம் பெற்று 06.06.2016 அன்று முற்பகல் பணியில் சேர்ந்த போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20ல் தெரிவித்தவாறு அரசுப் பணியாளர் சேருவதற்கு முன்னர், குற்ற பதிவுகள் ஏதுமில்லை என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, தனியருக்கு எந்த விதித்தளர்வோ / விலக்கோ அரசிடம் பெற வேண்டிய நிலை எழவில்லை என்பதால் தனியரை இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 06.06.2016 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

Scanned with CamScanner

மேலும், அன்னாரின் பணி, முன் தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின், அவற்றினை நடைமுறையில் உள்ள விதிகளின்படி, பெறத் தகுதியுடையவராகிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்./– xxx
முதன்மைச் செயலாளர்/
தொழிலாளர் ஆணையர்

பெறுநர்
திருமதி உ. புவனேஸ்வரி,
இளநிலை உதவியாளர்,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகம்,
திருவாரூர். (உரிய வழியாக)

நகல்
1. இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், சென்னை.
2. துணை இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், திருவாரூர்.

// அனுப்பப்படுகிறது //

13.9.2021
முதன்மைச் செயலாளர் /
தொழிலாளர் ஆணையருக்காக
13.09.2021

Scanned with CamScanner

ஒ1/35558/2013

அ/392/21 தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகம்,
சென்னை.32, நாள்.16.09.2021

**குறிப்பாணை**

| | |
|---|---|
| பொருள்: | பணிக்குழு –தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் – கருணையடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது – திருவாரூர், துணைஇயக்குநர் அலுவலகம் – திருமதி.உ.புவனேஸ்வரி, இளநிலை உதவியாளருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டது – தொடர்பாக |
| பார்வை: | 1. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் கடித எண். ஜி3/6168/14, நாள். 23.05.2016.<br>2. சென்னை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் குறிப்பாணை எண். ஒ1/35558/2013, நாள். 27.05.2016.<br>3. திருவாரூர், துணைஇயக்குநர் அவர்களின் கடிதம் எண். அ/227/2018, நாள். 27.02.2018, 31.01.2019, 02.07.2019,05.06.2020, 28.11.2020.<br>4. சென்னை,தொழிலாளர் ஆணையர் அவர்களின் கடித எண். ஜி3/24333/2019, நாள். 17.09.2020.<br>5. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள். 14.06.2021. (அரசுக்கு முகவரியிடப்பட்டது)<br>6. சென்னை,தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ஜி3/24333/2019, நாள். 13.09.2021. |

***

பார்வையில் காணும் கடிதங்களின் மீது திருவாரூர், துணை இயக்குநரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. பார்வை 6ல் காணும் செயல்முறை ஆணை வாயிலாக திருமதி.உ.புவனேஸ்வரி, இளநிலை உதவியாளருக்கு 06.06.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி, செயல்முறை ஆணை தகவலுக்காகவும், தக்க நடவடிக்கையின் பொருட்டும் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேலும் தனியரது பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேட்டினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை அனுப்பி வைக்குமாறு திருவாரூர், துணை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு– செயல்முறை ஆணை மற்றும் பணிப்பதிவேடு (1 தொகுதி)

17/09/2021

இயக்குநருக்காக(மு.கூ.பொ)

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,

சென்னை - 32.

17/9/21

பெறுநர்–

துணை இயக்குநர்

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருவாரூர்.

419
27.9.21

Scanned with CamScanner